Registered as a News Paper  பக்கங்கள் 04  விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM  Peoples Daily  மக்கள் தினசரி

நாதம் 04  திருவள்ளுவர் ஆண்டு 2024  ஆனி 29  [13-07-98]  செவ்வாய்க்கிழமை  ஓசை 145

## பொது நிர்வாக ஊழியர் சலுகை ஆசிரியைகளுக்கும் கிடைக்கும்

அரச பொது நிர்வாக சேவையிலுள்ள பெண்கள் கர்ப்பிணியாகி ஐந்து மாதங்களின் பின்னர் தமது காரியாலயக் கடமைக்கு அரை மணித்தியாலம் பிந்தி வருவதற்கும் அதே சமயம் கடமை முடிந்து தமது வீட்டுக்கு அரை மணித்தியாலம் முந்தி செல்வதற்கும் பொது நிர்வாகச் சுற்றறிக்கை மூலம் சலுகை வழங்கப்பட்டுள்ளது. இச் சலுகையை ஆசிரியைகளுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கல்வி, உயர் கல்வி அமைச்சின் செயலாளர் திரு. எம். டி. பீரிஸ் சுற்று நிருபம்மூலம் சகல கோட்ட மாவட்ட கல்விப் பணிப்பாளர்களுக்கும் தெரியப்படுத்தி உள்ளார். மேலும் இச் சலுகைகளை அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கும் போது பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாதவாறு பார்க்குமாறும் இவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்,

# கைதிகள்-உறவினர் சாகும்வரைநோன்பு!

## கொழும்பில் வீரசேகர அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள யுத்தக்கைதிகளும் அவர்களைப் பார்க்கச் சென்ற உறவினரும் நாளைமுதல் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப் போவதாக தமக்கு அறிவித்துள்ளதாக சிறிலங்கா அரசின் விசேட தூதுவராக முன்னர் யாழ். வந்த பிரிகேடியர் ஆனந்த வீரசேகர வெரித்தாஸ் வானொலிக்கு தெரிவித்தார்.

இவர்கள் குறிப்பிட்டபடி உண்ணாவிரதத்தை ஆரம்பிப்பார்கள் என தாம் நம்புவதாகவும் அவர் மேலும் கூறினார்.

இவர்களின் உண்ணாவிரதம் தொடர்பாகவும் விடுவிப்பு தொடர்பாகவும் பேச்சு நடத்த எதுவித ஏற்பாடுகளும் இல்லை என கேட்டபோது, தற்போதைய நிலையில் ஒன்றும் கூறமுடியாது என அவர் குறிப்பிட்டார்.

### சர்வதேச செஞ்சிலுவைச் சங்க

# கொழும்பு அலுவலகத்திற்கு உறவினர் படை எடுப்பு

[கொழும்பு]

விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள யுத்தக் கைதிகளின் உறவினர்கள் கொழும்பிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்திற்கு சென்று விசாரித்து வருவதாக பி.பி.ஸியின் சிங்கள சேவையாகிய சந்தேசிய தெரிவித்தது.

ஆனால் அவர்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் வழங்கக்கூடிய பதில் ஏதும் இல்லை என கூறப்படுவதாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தக்கைதிகளினதும், உறவினர்களினதும் உண்ணாவிரதம் குறித்து சர்வதேச செஞ்சிலுவைச்சங்க கொழும்பு அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் இது குறித்து அவர்களின் நடவடிக்கை என்ன? என உறவினர் விசாரித்து வருவதாகவும் தெரிய வருகிறது.

யுத்தக் கைதிகளின் உறவினரை மீண்டும் அழைத்து வரும் பொறுப்பு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினுடையதே யென்றும் யுத்தக் கைதிகள் விடுதலை விடயத்தில் அவ் அமைப்பே முயற்சி எடுக்க வேண்டும்எனவும் அரச உயரதிகாரிகள் வற்புறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

## உணவுப் பொருள்களுடன் 'குமாரி' வந்தடைந்தது

## எறிகணை வீச்சு

(வடமராட்சி)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட சில ஆட்லறி ஷெல்கள் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் விழுந்து வெடித்ததாக அப்பகுதிகளில் இருந்து தெரிவிக்கப்படுகிறது.

பலாலி முகாமிலிருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல்கள் சில தொண்டமானாறு, மான்பாய்ந்த வெளி பகுதியில் விழுந்து வெடித்ததாக சொல்லப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு 8 மணி முதல் ஏவப்பட்ட ஆட்லறி ஷெல்களே இவ்வாறு விழுந்து வெடித்த போதிலும் சேதவிபரங்கள் எதுவும் தெரிய வரவில்லை. (யோ)

## மிதிவெடியில் காலிழந்தார்

(யாழ்ப்பாணம்)

தோட்டம் பார்க்கச் சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் மிதிவெடி ஒன்றில் சிக்கியதில் தனது இடது காலை இழந்தார்.

மேற்படி சம்பவம் அச்சுவேலி தென்மூலையில் நேற்று பிற்பகல் 3 30 மணியளவில் நடந்தது. வேதநாயகம் கிறிஸ்ரி (வயது 35) என்பவரே தனது காலை இழந்தவராவார். இவர் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

## கைக்குண்டுடன் கைது

[கொழும்பு]

'பாதாள உலக' போதைப் பொருள் வியாபாரக் கோஷ்டியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுகளுடன் கொழும்பில் பிடிபட்டுள்ளார்.

இவ்வாறான கைக்குண்டுடன் வேறொருவரும் முன்னர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

## புதிய கப்பலில்

# கைதிகளை விடுவிக்க அரசு தவறிவிட்டது!

## உறவினர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

''இலங்கை பிரஜைகளான எம்மைக் காக்கும் கடமையிலிருந்து சிறிலங்கா அரசு தவறிவிட்டது. இதனால் எமது உறவினர்கள் உண்ணாவிரதம் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அங்கு இருக்கும் பெற்றோர் உண்ணாவிரதம் இருக்கக் கூடிய உடல் நிலையில் இல்லை. சிலர் நோய்வாய்ப்பட்ட நிலையில் உள்ளனர்.''

இவ்வாறு விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதியின் சகோதரரான பி டி. ஆரியரட்ண பி.பி. ஸியின் சிங்கள ஒலிபரப்பாகிய சந்தேசியவிற்கு தெரிவித்தார்.

யுத்தக்கைதிகளை விடுவிப்பது தொடர்பாக அரசாங்கம் உட்பட எந்தவொரு அமைப்பும் சரியாகச் செயற்படவில்லை

நானும் எனது தாயாரும் எனது சகோதரனைப் பார்க்க சென்றிருந்தோம் தற்பொழுது நான் மட்டும் திரும்பி விட்டேன் அங்குள்ள பெற்றோர் எவரும் உண்ணாவிரதம் இருக்கக்கூடிய நிலையில் இல்லை. ஆனால், அவர்கள் உண்ணாவிரதம் இருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அவர்கள் உண்ணாவிரதம் இருந்து ஆபத்தானகட்டத்தை அடைந்தால் அவர்களை மீட்பது சிரமம் என்றார்.

### விடுவிக்கப்பட்ட பொலிஸாருக்கு

## பொலிஸ் சேமநிதியிலிருந்து தலா ஒருலட்சம் நிதி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் அண்மையில் விடுதலை செய்யப்பட்ட ஆறு பொலிஸாருக்கும் தலா 1,00,000 ரூபா நிதி உதவி வழங்க பொலிஸ் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

பொலிஸ் சேமலாப நிதியில் இருந்து ஒதுக்கப்பட்டுள்ள இந் நிதி விடுதலை செய்யப்பட்ட பொலிஸாருக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேவேளை விடுதலையடைந்த பொலிஸார் கடந்த 9 ஆம் திகதி பொலிஸ் மாஅதிபர் ஏனஸ்ட் பெரேராவை சந்தித்துப் பேசினர்.

## காரைநகர் நிலைகளிலிருந்து படையினர் தாக்குதல்

(தொல்புரம்)

காரைநகர் கரையோரக் காவல் நிலைகளிலுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் தமது காவல் நிலைகளிலிருந்து நேற்றுக்காலை 9 00 மணியளவில் பொன்னாலை, மூளாய் பகுதிகளிலுள்ள மக்கள் குடியிருப்புக்களை நோக்கி அகோர எறிகணை வீச்சினை மேற்கொண்டனர். இவ் எறிகணைகள் பொன்னாலை தெற்கு

காவல் நிலைகளிலிருந்து பொன்னாலை கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர். இத்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## கிளிநொச்சி நபர் ஒருவர் ராணுவஉளவாளியால் கைது

(வவுனியா)

னர். பிறவுண் கம்பனியில்

# கொழும்பு அலுவலகத்திற்கு உறவினர் படை எடுப்பு

[கொழும்பு]

விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள யுத்தக் கைதிகளின் உறவினர்கள் கொழும்பிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்திற்கு சென்று விசாரித்து வருவதாக பி. பி. ஸியின் சிங்கள சேவையாகிய சந்தேசிய தெரிவித்தது.

ஆனால் அவர்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் வழங்கக்கூடிய பதில் ஏதும் இல்லை என கூறப்படுவதாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்தக்கைதிகளினதும், உறவினர்களினதும் உண்ணாவிரதம் குறித்து சர்வதேச செஞ்சிலுவைச்சங்க கொழும்பு அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் இது குறித்து அவர்களின் நடவடிக்கை என்ன? என உறவினர் விசாரித்து வருவதாகவும் தெரிய வருகிறது.

யுத்தக் கைதிகளின் உறவினரை மீண்டும் அழைத்து வரும் பொறுப்பு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினுடையதே யென்றும் யுத்தக் கைதிகள் விடுதலை விடயத்தில் அவ் அமைப்பே முயற்சி எடுக்க வேண்டும்எனவும் அரச உயரதிகாரிகள் வற்புறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

## உணவுப் பொருள்களுடன் 'குமாரி' வந்தடைந்தது

(வடமராட்சி)

கொழும்பிலிருந்து புறப்பட்ட 'குமாரி' கப்பல் நேற்று காலை 7 மணியளவில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இக் கப்பலில் அரிசி 1500 மெட்றிக்தொன், பயறு 25 மெட்றிக்தொன், கௌபி 25 மெட்றிக்தொன், பளை கொத்தணி அதிபருக்கு காகிதாதிகள், செயலகத்திற்கு 100 துவிச்சக்கரவண்டிகள், 4 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் தே. எண்ணெய் 269 பரல், டீசல் 28 பரல்களும் வந்தன.

பொருள்கள் எடுத்து வரப்பட்ட பட்டியலில் தபால் பொதிகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இதனை ஆதாரமாக வைத்து தபால்கள் எடுத்துவரப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

இக் கப்பலில் யாழ் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரும் வந்தார். யாழ். திட்டமிடல் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் கப்பலுக்குச் சென்று பொருள்களைபாரமேற்றதைத் தொடர்ந்து பொருள்கள் இறக்கப்பட்டன. (யோ)

## வங்கிக்கு பணம்

(வடமராட்சி)

யாழ். இலங்கை வங்கிக்கு 'குமாரி' கப்பலில் 30மில்லியன் ரூபா பணம் எடுத்து வரப்பட்டது. கொழும்புக்குச் சென்றிருந்த வங்கி உத்தியோகத்தர் ஒருவரினால் பணம்எடுத்து வரப்பட்டது. (யோ)

## 5ஆம் கட்ட மோட்டார் ஊர்தி பதிவுகள் ஆரம்பம்

கோப்பாய் / உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஊர்தி உரிமையாளர்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் கேட்டுள்ளனர்.

சிறிலங்காவால் வழங்கப்பட்ட மூல ஆவணங்கள் உள்ளோரும், மூல ஆவணங்கள் இல்லாதோரும் பதிவுகளை மேற்கொள்ளலாம். பதிவுகளை மேற்கொள்ள வருபவர்கள் குடும்ப அட்டைகளை எடுத்து வருவதோடு ஊர்திகளையும் பதிவுச் செயலகத்துக்குக் கொண்டுவந்து பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் மோட்டார் ஊர்தி பதிவு பகுதியினர் கேட்டுள்ளனர்.

## எனது பாதுகாப்பில் அரசுக்கு அக்கறையில்லை

– சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

''எனது உயிருக்கு ஆபத்து உள்ளது என்பதை அரசாங்கம் உணர்ந்தும் முதலமைச்சர் ஒருவருக்கு கொடுக்கவேண்டிய பாதுகாப்பைக் கூட அரசு இன்னமும் எனக்கு வழங்கவில்லை. ஐந்து ரிசேவ் பொலிஸ் பிரிவைக் கொண்ட பாதுகாப்பே எனக்கு வழங்கப்பட்டிருக்கிறது.''

இவ்வாறு மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க தனது முதலாவது பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், ''புலிகள் இயக்கத்தினர் கொழும்பில்கொலை செய்யவுள்ள அதிமுக்கிய அரசியல்வாதிகளின் பெயர்களில் எனது பெயரும் அடங்கியிருப்பதாக இராணுவ உளவுப் பிரிவு தெரிவித்துள்ளது.

''ஐ தே. க. வுக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதால் அங்கு பேசப்படும்விடயங்கள் எனக்கு கிடைக்கின்றன. இராப்போசன விருந்தொன்றின் பின் இரு அமைச்சர்கள் சந்தி

(4ஆம் பக்கம் பார்க்க)

## கட்சித்தலைமைபீடத்தில்சேர சிறிமானி விருப்பம்

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி அரசியல் தலைமைப் பீடத்தில் சேர்ந்து கொள்ளுமாறு தனக்குவேண்டுகோள் விடுககப்படின் அதை தான் பரிசீலனை செய்யப் போவதாக திருமதி சிறிமானி அத்துலத் முதலி கூறியுள்ளார்.

இதுவரை தமக்கு இதுசம்பந்தமாக அழைப்பு ஏதும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

நடந்தது. வேதநாயகம் கிறிஸ்ரி (வயது 35) என்பவரே தனது காலை இழந்தவராவார். இவர் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

## கைக்குண்டுடன் கைது

[கொழும்பு]

'பாதாள உலக' போதைப் பொருள் வியாபாரக் கோஷ்டியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுகளுடன் கொழும்பில் பிடிபட்டுள்ளார்.

இவ்வாறான கைக்குண்டுடன் வேறொருவரும் முன்னர் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

## புதிய கப்பலில் பொருள்கள்?

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுக்கு புதிய கப்பலொன்று இன்று வருமென ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

இக்கப்பலில் என்ன பொருள்கள் எடுத்துவரப்படுகின்றதென்பது பற்றிய விபரங்கள் எதுவும் தெரியவரவில்லை. இக்கப்பல்பற்றி மேலதிக அரசாங்க அதிபரிடம் வினாவியபோது தமக்கு இதுபற்றிய செய்திகள் எதுவும் தெரியாது என தெரிவித்தார். (சி)

## குமாரியில் விவசாய உபகரணங்கள்

(வடமராட்சி)

யாழ். மாவட்டத்தில் கமநல சேவை நிலையங்களில் முற்பணம் செலுத்திய விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் சில 'குமாரி' கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன. இவை கமநலசேவை நிலையங்கள் மூலமாக விநியோகிக்கப்படவுள்ளன.

வாளி 4ஆயிரம், தெளிகருவி 60, நீர் இறைக்கும் இயந்திரம் 75, அல்கதீன் பைப் 500, கம

[4 ஆம் பக்கம் பார்க்க]

பும் சரியாகச் செயற்படவில்லை

நானும் எனது தாயாரும் எனது சகோதரனைப் பார்க்க சென்றிருந்தோம் தற்பொழுது நான் மட்டும் திரும்பி விட்டேன் அங்குள்ள பெற்றோர்

## காரைநகர் நிலைகளிலிருந்து படையினர் தாக்குதல்

(தொல்புரம்)

காரைநகர் கரையோரக் காவல் நிலைகளிலுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் தமது காவல் நிலைகளிலிருந்து நேற்றுக்காலை 9 00 மணியளவில் பொன்னாலை, மூளாய் பகுதிகளிலுள்ள மக்கள் குடியிருப்புக்களை நோக்கி அகோர எறிகணை வீச்சினை மேற்கொண்டனர். இவ் எறிகணைகள் பொன்னாலை தெற்கு மூளாய் ஐயனார் கோவிலடியை அண்மித்த பகுதிகளில் விழ்ந்து வெடித்தன.

மேலும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் இதே காவல் நிலைகளிலிருந்து பொன்னாலை கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர். இத்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## மாவீரரான கரும்புலிகள் நினைவாக நிகழ்ச்சிகள்

கடற்புலிகள் தினம் கடந்த ஜூலை 10 ஆம் திகதி மன்னாரில் அனுஷ்டிக்கப்பட்டது.

மன்னாரில்வீரச்சாவடைந்த முதற் கடற்புலியான கப்டன் கொலின்ஸ் நினைவாகவும் அவருடன் வீரச்சாவடைந்த கடற்புலிகள் நினைவாகவும் கடல் விளையாட்டுப்போட்டிகளும் வீரவணக்கக் கூட்டங்களும் இடம்பெற்றன.

மன்னார் மாவட்டம் முழங்காவில், பூநகரி, பள்ளமடு ஆகிய வட்டங்களில் கடல் விளையாட்டுப் போட்டிகளும் மடு. நானாட்டான் வட்டங்களில் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் போன்ற போட்டிகளும் நடைபெற்றன. தொடர்ந்து இரவு 7 மணியளவில் மடுவட்டத்தில் வீரவணக்கக் கூட்டங்கள் இடம் பெற்றன.

இக்கூட்டத்தில் ஈகைச் சுடரை கடற்புலி கப்டன்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## தலா ஒருலட்சம் நிதி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் அண்மையில் விடுதலை செய்யப்பட்ட ஆறு பொலிஸாருக்கும் தலா 1,00,000 ரூபா நிதி உதவி வழங்க பொலிஸ் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

பொலிஸ் சேமலாப நிதியில் இருந்து ஒதுக்கப்பட்டுள்ள இந்நிதி விடுதலை செய்யப்பட்ட பொலிஸாருக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேவேளை விடுதலையடைந்த பொலிஸார் கடந்த 9 ஆம் திகதி பொலிஸ் மா அதிபர் ஏனஸ்ட் பெரேராவை சந்தித்துப் பேசினர்.

## கிளிநொச்சி நபர் ஒருவர் ராணுவஉளவாளியால் கைது

(வவுனியா)

நொச்சிமோட்டை ஊடாக வவுனியா நகர் நோக்கி செல்ல முயன்ற ஒருவரை நேற்று சிறிலங்கா ராணுவத்தின் உளவாளிகள் கைது செய்துள்ளனர். பிறவுண் கம்பனியில் உள்ள இவ் உளவாளிகள் இரத்தினபுரம் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவரையே கைது செய்துள்ளதாக தெரிய வருகிறது.

இதேவேளை தடைசெய்யப்பட்ட பொருள்களை எடுத்து வருபவர்களை பிடிக்கும் தாண்டிக்குளம் இராணுவத்தினர் அவர்களை லொறிகளில் ஏற்றி மன்னார் வீதியூடாக அனுப்பிவருகின்றனர்.

## மக்கள் வீடுகளில் ராணுவ காவலரண்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு படையினரின் சில முகாம்களும் காவலரண்களும், அமைக்கப்பட்டுள்ளதனால் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் அகதிமுகாம்களிலும் நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இவ்வாறு இராணுவத்தினர் நிலைகொண்டிருப்பதால் கள்ளியங்காடு, சாகிரா வித்தியாலயம், மண்டூர், கொக்கட்டிச்சோலை ஆகிய இடங்களில் பலர் அகதிகளாகியுள்ளனர்,

இவ்வாறு இராணுவம் நிலைகொண்டிருப்பதால் இப்பகுதி மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பமுடியாத நிலை உருவாகியிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் இராணுவத்தினர் மக்கள் வாழ்விடங்களிலிருந்து வெளியேற வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவை குறித்து

## ஜனாதிபதி-அரச அதிபர் சந்தித்துப் பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் அத்தியாவசிய சேவைகள் குறித்து யாழ் அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் ஜனாதிபதி திரு. டி. பி. விஜயதுங்காவுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

கொழும்பு சென்றிருந்த யாழ். அரச அதிபர் அங்கு தங்கியிருந்த காலப்பகுதியில் மேற்படி விடயம் குறித்து பேச்சுவார்த்தை நடாத்தி பல கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் முன்வைத்ததாக நேற்று கொழும்பில் இருந்து திரும்பிய யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் சகல போட்டிப் பரீட்சைகளும் யாழ்.மாவட்டத்திலும் நடாத்தப்பட வேண்டும் என்றும் இடம்பெயர்ந்த மக்களுக்கு விநியோகிக்கப்படும் நிவாரணப் பொருள்களுக்கான போக்குவரத்துச் செலவை

( 4 ஆம் பக்கம் பார்க்க )

இனப்பிரச்சினை தீர்வில்

# இந்தியாவின் அங்கீகாரம் காமினிக்கே உள்ளது

பிரேமரத்ன குணசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

''வடக்கு-கிழக்கு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண இரண்டு தலைவர்கள் உள்ளனர். ஒருவர் ஜே. ஆர். ஜெயவர்த்தனா; மற்றவர் காமினி திசாநாயக்கா. இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியா காமினி திசாநாயக்கா வைத்தான் ஏற்றுக்கொள்கிறது.''

இவ்வாறு மேல் மாகாண கடல் தொழில் சுகாதார அமைச்சர் பிரேமரத்ன குணசேகர அம்பலாங்கொடையில் நடந்த கூட்டத்தில் பேசும்போது தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில், ''இலங்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### மென் பானங்கள்

SUNRISE மென்பானங்கள் சுத்தமானவை சுவையானவை பருகி விடுதலைப்படை வீர் தயாரிப்பு விநியோகம் சிவா இண்டஸ்றீஸ் 35/3 கொழும்பு புத்துறைசாலை சுண்டுக்குளி (சி-6986)

### தவறிவிட்டது

சிவலிங்கம் சியாமளா (இல. 717922174V) என்பவருடைய அடையாள அட்டை கோண்டாவில் — சுன்னாகம் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் (5353)

### பிரத்தியேக வகுப்புக்கள்

AL 1994/95 தமிழ், இந்து நாகரிகம வகுப்புக்கள் ஆரம்பம் 17-07 1993 மாலை 4 மணி. ஆசிரியர் திரு தாஸ் உதயன் அக்கடமி, 278, பருத்தித்துறை வீதி, நல்லூர். (யாழ். மாநகரசபை முன்) (5354)

G A Q 1994(பேராதனை) தமிழ், இந்துநாகரிகம் வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. உதயன் அக்கடமி (யாழ். மாநகரசபை முன்பாக) பருத்தித்துறை வீதி, நல்லூர். (5354)

### விற்பனைக்குண்டு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆலங்கட்டை றோட், வெள்ளாவத்தை, பொலிகண்டி கற்கண்டு மாமா சைக்கிள்கடை பொலிகண்டி. (5331)

### கிணற்றில் வீழ்ந்து மரணம்

கிணற்றில் தண்ணீர் அள்ளிய சிறுவன் தவறி வீழ்ந்து கிணற்றினுள் மரணமானார்.

இச் சம்பவம் கடந்த 4ஆம் திகதி வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலய வீதியில் இடம் பெற்றது

மரணமான சிறுவன் மங்களகுமார்—குமார் (வயது 7) என்னும் பாடசாலை மாணவராவார். (30)

### சிரமதானம்

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு, புலோலி வணிகர் சங்க உறுப்பினர்கள் மந்திகை வைத்திய சாலையில் அண்மையில் சிரமதானத்தை மேற்

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

18. 07. 1993

மலர்வு:

06-07-1975

வீரச்சாவு:

18-07-1991



### வீரவேங்கை சிவநாதன்

(இ. செல்லத்துரை ஜெயராஜ்)

குழந்தை பருவத்து
குதுகலத்துடன் நீ திரிந்ததும்
கொள்கைப் பற்று கொண்டே
புலிவீரனாய் மாறியதும்
எதிரியுடன் போரிட
போர்க்களம் நீ சென்றதும்
பகை முடிக்கும் போரிலே
மறவேங்கையாய் மடிந்ததும்
சட்டென்று எல்லாம்
நடந்து முடிந்ததை எண்ணிப் பார்க்கிறோம்
இதயம் துடிக்க விம்மி நாம் அழுகிறோம்
ஆனாலும்
தீரச்சிறுவன் உந்தன் வீரத்தை எண்ணி
பெருமிதமடைகின்றோம்

அப்பா, அம்மா, அண்ணா, தங்கைச்சி, உறவினர், நண்பர்கள்.

பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு. (5359)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



## நினைவு கூருகின்றோம் ... 1993-07-13

1984-ம் ஆண்டு இதேதினத்தில் தொண்டமானாறுப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய,

**கப்டன் லாலா ரஞ்சன்** (கனகநாயகம் ஞானேந்திரமோகன்- பழையஉடையார் ஒழுங்கை,-ஓடக்கரை-பருத்தித்துறை)

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரால் சுடடுக் கொல்லப்பட்ட தமிழ்க்கடற்றொழிலாளி

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்ப்பாணத்தில் எதிர்பாராத வெடிவிபத்தில் எமைப்பிரிந்த

**நிசாந்தன்** (கோணமலை கெங்காதரன்-ஆரையம்பதி-மட்டக்களப்பு)

**தேவா** (இராசசுந்தரம் சிறிகாந்தன்-13 கலைப்புலவர் வீதி-யாழ்)

1986ஆம் ஆண்டு மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட 50க்கு மேற்பட்ட தமிழர்கள்.

வவுனியா/பாவற்குளம் 10-ம் படிவம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் விவசாயி.

1987ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய,

**லிண்டன்** (சின்னையா நடராசா-விளாத்திக்குளம்,இரணை இலுப்பைக்குளம்-வவுனியா)

வடமராட்சிப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட கரவெட்டி மேற்கு மணியர் வளவைச்சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்,

1988ஆம் ஆண்டு இந்தியப்படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்துக் கொலை செய்யப்பட்ட மட்டு-ஆரையம்பதியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1989 ஆம் ஆண்டு கொழும்பில் அமிர்தலிங்கம் முதலான தமிழினத்துரோகிகளுக்கான மரணதண்டனையை நிறைவேற்றியபோது சிறிலங்காப்படையினருடன்ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் அறிவு** (கனகசபை சிவானந்தன்- ஒட்டங்குளம், துணுக்காய்-முல்லை)

**2-ம் லெப் பீற்றர்** (— அலோசியஸ் கிளிநொச்சி)

**மேஜர் விசு** (இராசையா அரவிந்தாரம்-வதிரி,நெல்லியடி, கரவெட்டி-யாழ்)

திருமலையில் தேசவிரோத சக்திகளினால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**சறோஅக்கா** (தாமோதரமபிள்ளை சறோஜினிதேவி- கூனித்தீவு, மூதூர்-திருமலை)

பருத்தித்துறை-ஆன்பருடடிப்பகுதியில் சிற்றூர்தி ஒன்றின்மீது இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூடடில் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு மதுராங்குளத்தில் எமது முகாமை சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைக்க முற்பட்ட போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**அரசன்** (— யோகநாதன் - பன்குளம் - திருமலை)

**கேதீஸ்** (—— திருமலை நகர்)

கிளிநொச்சி - கொக்காவில் பகுதியில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவமுகாம் தகர்ப்பின் போது 3-ம்நாள் சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் உஷா** (வனிதாம்பிகை இராசையா - [உஷாவீதி] 3-ம் வட்டாரம் - முல்லைத்தீவு)

**ஜெயா** (சங்கரப்பிள்ளை கணேசன் - கட்டையர்குளம் - வவுனியா)

**2-ம் லெப். சாலினி** (நவநீலவதனா அருமைச்சந்திரன் - புதியசுந்தை - வல்வெட்டித்துறை)

அம்பாறை - சொறிக்கல்முனைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட கிறிஸ்தவ மதகுரு.

1991 ஆம் ஆண்டு முல்லைத்தீவு - பட்டிக்குடியிருப்புப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

துணைப்படை வீரர்;

## 2-ம் ஆண்டு நினைவாக...



### கப்டன் ஜஸ்ரின்

(கிருஷ்ணபிள்ளை சுதாகர்)

தாயின் மடியில் 22.01.1973

தாயக மண்ணில் 13.07.1991

எங்கள் குல முத்தானவனே!
தலைவனின் சொத்தானவனே!
கிராமத்தின் வித்தகனே!
ஈழத்தின் வித்தானவனே!

13.07 1993 செவ்வாய்க்கிழமை (இன்று) மாலை 7 மணியளவில ஜஸ்ரினின் நினைவாக அடிக்கல் நாட்டு வைபவம் நடைபெறும். இடம்: அம்மன் ஆலயம், அணிஞ்சாம்புலம், பொலிகண்டி, வல்வெட்டித்துறை.

கொற்றாவத்தை
கரும்புலிகள் எழுச்சிக் கிராமம்,
கட்டைபபுளியடி,
அல்வாய் மேற்கு, அல்வாய்.

—குடும்பத்தினர்

[5352]

**2-ம் லெப். டொனால்ட்** (இராமசாமி புவனகுமார்- இரத்தினபுரம் - கிளிநொச்சி)

**ஜெகன்** (நடராசா தவராசா - பரந்தன் - கிளிநொச்சி)

**சீராளன்** (சண்முகம் உதயகுமார் - 95, கனகபுரம் - கிளிநொச்சி)

**றோம்** (சோமசுந்தரம் திருநீலசங்கர் - 154-ம் கட்டை, இரணைமடு - கிளிநொச்சி)

**கீறோ** (திருநாவுக்கரசு குசலவன் - இராமநாதபுரம், வட்டக்கச்சி - கிளிநொச்சி)

**கப்டன் தமயந்தி** (கமலலோஜினி வைத்தியநாதன்- ஆத்திமோட்டை - மன்னார்)

**லெப். பரன்** (தியாகராஜா மோகன்ராஜா – 09.பெரியமடு - மன்னார்)

**கண்மணி** (சரோசினி முருகையா - சின்னக்கடை - மன்னார்)

**பார்த்தீபன்** (டொமினிக் கனியூட் - 5-ம் வட்டாரம், பேசாலை - மன்னார்)

**மாலா** (றோஸ் மங்கலிக்கா யாக்கோப்சில்வா - பூக்குளம், முள்ளிக்குளம் - புத்தளம்)

**மேஜர் கேசரி** (பாலகிருஷ்ணன் அரசகேசரி - தம்பசிட்டி, புலோலி மேற்கு - பருத்தித்துறை)

**மேஜர் சுரேஷ்** (கணேஸ் புலேந்திரன் - தாளையடி, வடமராட்சி கிழக்கு - யாழ்)

**கப்டன் டக்ளஸ்** (விக்கினேஸ்வரராஜா சதீஸ்கரன்- நல்ல

கண்டி. (5331)

## கிணற்றில் வீழ்ந்து மரணம்

கிணற்றில் தண்ணீர் அள்ளிய சிறுவன் தவறி வீழ்ந்து கிணற்றினுள் மரணமானார்.

இச்சம்பவம் கடந்த 4ஆம் திகதி வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலய வீதியில் இடம் பெற்றது

மரணமான சிறுவன் மங்களகுமார்—குமார் (வயது 7) என்னும் பாடசாலை மாணவராவார். (30)

## சிரமதானம்

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு, புலோலி வணிகர் சங்க உறுப்பினர்கள் மந்திகை வைத்திய சாலையில் அண்மையில் சிரமதானத்தை மேற்கொண்டனர்.

புலோலி வணிகர் சங்கத் தலைவர் கணேசராசா தலைமையில் இச்சிரமதானம் இடம் பெற்றது. (30)

## மைதானமின்றியும் முன்னணியில்

நல்லூர் கொத்தணி மட்டத்திலான ஆரம்பப் பாடசாலை விளையாட்டுப் போட்டியில், நல்லூர் ஆனந்த வித்தியாலயம் பல வெற்றிகளை பெற்றுள்ளது.

அடுத்து நடைபெறும் கோட்ட மட்டப் போட்டியிலும் இப் பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்கின்றனர்.

இதேவேளை இப் பாடசாலைக்கென ஒரு விளையாட்டு மைதானம் இல்லையென்பதும் குறிப்பிடத்தக்கதாகும். [30]

## முடிவு திகதி நீடிப்பு

[யாழ்ப்பாணம்]

நாவற்குழி லவனிதா குடியிருப்பில் இயங்கிவரும் மாவீரர் நற்பணி மன்ற விளையாட்டுக் குழுவினால் குடியிருப்பின் 2-வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப் படவுள்ள உதைபந்தாட்ட, கரபந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் கரபந்தாட்ட போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 15-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (22)

## ஆதாரம் காட்டி பெறவும்

ஒரு தொகுதி உடைகள் படஅல்பம் டொர்ச் என்பன அடங்கிய கைப்பை ஒன்று கிளாலிப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 17 விதானையார் ஒழுங்கை சுண்டுக்குழி என்ற முகவரியும் இவற்றுடன் காணப்படுகிறது. உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

---

அப்பா, அம்மா, அண்ணா,
தங்கைச்சி, உறவினர், நண்பர்கள்.

பொற்பதி றோட்,
கொக்குவில் கிழக்கு. (5359)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



13-07-1991 அன்று ஆனையிறவு இராணுவ முகாம் தாக்குதலின் போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட –

## 2-ம் லெப். நார்த்தீபன்

(அழகராசா புஸ்பராசா)

ஜனனம்: 11. 10. 1976 — வீரச்சாவு: 13. 07. 1991

தாய்மடியில் தலைவைத்து தூங்கும் வயதில்
தாயகத்தை மீட்பதற்காய்
தணியாத தாகம் கொண்டாய்
தமிழ்த் தலைவன் தலைமை ஏற்று
ஆரம்பக் கல்வியதை ஆரம்பித்தாய் நீ
சின்னஞ்சிறு புலிவீரன் என்றாலும்
உறுதியின் உறைவிடமாய் நின்றாயே
கயவர் கூட்டம்
படைகொண்டு வருகின்றார் என்று கேட்டு
போர்க்கோலம் நீ பூண்டு களம் புகுந்து
இறுதி வரை போராடி தமிழ் காக்க
உயிர் தந்த மாவீரனே.

சுப்பர்மடம்,
பருத்தித்துறை. [5357]

இங்ஙனம்
குடும்பத்தினர்.

---

1990ஆம் ஆண்டு [illegible]
சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைக்க முற்பட்ட போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**அரசன்** (— யோகநாதன் - பன்குளம் - திருமலை)

**கேதீஸ்** (— — திருமலை நகர்)

கிளிநொச்சி - கொக்காவில் பகுதியில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவமுகாம் தகர்ப்பின் போது 3-ம்நாள் சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் உஷா** (வனிதாம்பிகை இராசையா - [உஷாவீதி] 3-ம் வட்டாரம் - முல்லைத்தீவு)

**ஜெயா** (சங்கரப்பிள்ளை கணேசன் - கட்டையர்குளம் - வவுனியா)

**2–ம் லெப். சாலினி** (நவநீலவதனா அருமைச்சந்திரன் - புதியசந்தை - வல்வெட்டித்துறை)

அம்பாறை - சொறிக்கல்முனைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட கிறிஸ்தவ மதகுரு.

1991ஆம் ஆண்டு முல்லைத்தீவு - பட்டிக்குடியிருப்புப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

துணைப்படை வீரர்;

**சிவராசா** (சிவசம்பு சிவராசா - பட்டிக்குடியிருப்பு - முல்லைத்தீவு)

இவருடன் வந்துகொண்டிருந்தபோது இதேசம்பவத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் கொல்லப்பட்ட மாமடுவைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

மட்டு - களுவாஞ்சிக்குடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது வீரச்சாவெய்திய -

**கமல்** (— முல்லைத்தீவு)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியாக ஆகாய -கடல்வெளி நடவடிக்கையின்போது, உப்பள அலுவலக பிரதானமுகாம் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**கப்டன் நடா** (தங்கராசா பாஸ்கரன் - சித்தி விநாயகர் எதிர்வீதி, தம்பிலுவில் - அம்பாறை)

**இருதயராஜ்** (லோறன்ஸ் ஜோர்ஜ் - 6-ம் குடியிருப்பு, சொறிக்கல்முனை. கல்முனை - அம்பாறை)

**அனோஜா/அனுசா** (சிறிகலா யோகநாதன் - இராசபுரம், கரடியனாறு - மட்டு)

**அன்பவன்/அன்பழகன்** [சுந்தரலிங்கம்ஜெயகாந்தன்-தபாற் கந்தோர்வீதி, கிரான் - மட்டு]

**குலசிங்கம்** [இராசசிங்கம் றேமன் - 2-ம் வட்டாரம், கண்டலடி, வாகரை - மட்டு]

**திலகன்** [அருணாசலம் சிவநாதன் - 14-ம் குடியிருப்பு] மண்டூர் - மட்டு]

**லெப். பிரசாந்த்** [கந்தசாமி மனோகரன் - முட்டுச்சேனை, மூதூர் - திருமலை]

**மெறடோனா/நிரோனா** [கைலாசபிள்ளை சந்திரகுமார் - ஆலங்கேணி கிண்ணியா-திருமலை]

**அப்பன்** [யோண் லெஸ்ரர்-விகாரைவீதி, புதுக்குடியிருப்பு, தம்பலகமம் - திருமலை]

**நேதாஜி** [விஜயகுமாரி சிவஞானம் - ஒடைவெளி நெடுங்கேணி - மணலாறு]

**யுகந்தன்** [நடராஜா பத்மநாதன் - 16-ம் கட்டை, கொக்குதொடுவாய் - மணலாறு]

**லெப் காசி** [மரியான் ஞானம் - நெகிலங்குளம், மாங்குளம் - முல்லைத்தீவு]

**மீனாட்சி** [கலைச்செல்வி இராஜரட்ணம் - 1-ம் வட்டாரம், முள்ளியவளை - முல்லைத்தீவு]

**மருது** [இராமசாமி மருதலிங்கம் - 18, முத்தையன்கட்டு, ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு]

**நாகராசா** (முத்துராசா நகராசா - புதியகுடியிருப்பு, கண்டி வீதி, மாங்குளம் - முல்லைத்தீவு)

**கணேஸ்** (இராசதுரை ஜெயரத்தினம் - புளியங்குளம், ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

**2 ம் லெப். மஞ்சுதன்** (சிவமாலை குகநேசன் - புளியங்குளம், ஓமந்தை - வவுனியா)

**2–ம் லெப். பூபாலினி** (பரமேஸ்வரி நாகரத்தினம் - நியூ அம்பாள் பேக்கரி, 8-ம் படிவம், யோகபுரம் - மல்லாவி)

**ஜெகன்** (நடராசா தவராசா - பரந்தன் - கிளிநொச்சி)

**சீராளன்** (சண்முகம் உதயகுமார் - 95, கனகபுரம் - கிளிநொச்சி)

**றோம்** (சோமசுந்தரம் திருநீலசங்கர் - 154-ம் கட்டை, இரணைமடு - கிளிநொச்சி)

**கீறோ** (திருநாவுக்கரசு குசலவன் - இராமநாதபுரம், வட்டக்கச்சி - கிளிநொச்சி)

**கப்டன் தமயந்தி** (கமலலோஜினி வைத்தியநாதன்- ஆத்திமோட்டை - மன்னார்)

**லெப். பரன்** (தியாகராஜா மோகன்ராஜா - 09.பெரியமடு - மன்னார்)

**கண்மணி** (சரோசினி முருகையா - சின்னக்கடை - மன்னார்)

**பார்த்தீபன்** (டொமினிக் கனியூட் - 5-ம் வட்டாரம், பேசாலை - மன்னார்)

**மாலா** (றோஸ் மங்களிக்கா யாக்கோப்சில்வா - பூக்குளம், முள்ளிக்குளம் - புத்தளம்)

**மேஜர் கேசரி** (பாலகிருஷ்ணன் அரசகேசரி - தம்பசிட்டி, புலோலி மேற்கு - பருத்தித்துறை)

**மேஜர் சுரேஷ்** (கணேஸ் புலேந்திரன் - தாளையடி, வடமராட்சி கிழக்கு - யாழ்)

**கப்டன் டக்ளஸ்** (விக்கினேஸ்வரராஜா சதீஸ்கரன்- நல்லதம்பி வீதி, மானிப்பாய் - யாழ்)

**கப்டன் ஜஸ்ரின்** (கிருஷ்ணபிள்ளை சுதாகர் - அல்வாய் மேற்கு, பருத்தித்துறை)

**லெப். வினோஜா** (விஜிதா சுவாம்பிள்ளை 21, 1-ம்குறுக்குத்தெரு, பாஷையூர் - யாழ்)

**லெப். லோகி** (வேலாயுதம் சிவகுமார் - 1-ம் கட்டை, புலோலி, பருத்தித்துறை - யாழ்)

**லெப். டில்லிக்காந்த்** [மயில்வாகனம் சந்திரகுமார் - நெடியகாடு - வல்வெட்டித்துறை]

**லெப். கஜன்** (சின்னையா சீவரத்தினம் - அளவெட்டி வடக்கு - யாழ்)

**2 ம் லெப். கவி** (ராஜி சீவரத்தினம் - ஆதியாமலை, உடுபபிட்டி - யாழ்)

**2–ம் லெப். நார்த்தீபன்** (அழகராசா புஸ்பராசா -சுப்பர்மடம், பருத்தித்துறை)

**2–ம் லெப். அகிலன்** [கதிர்காமு பாலச்சந்திரன் - போக்கறுப்பு - முள்ளியான்]

**2–ம் லெப். மதிவாணன்** [ஐயாத்துரை சபேசன் – துன்னாலைதெற்கு,கரவெட்டி-யாழ்]

**2-ம் லெப். தனேந்திரன்/அக்பர்** [துரைசிங்கம் சிறீகரன் - கல்லறைவத்தை, இளவாலை - யாழ்]

**தவமலர்** [மஞ்சுளாதேவி ஈஸ்வரபாதம் - மருதங்கேணி வடக்கு, தாளையடி - யாழ்]

**நிசா** (விஜயகுமாரி சின்னத்தம்பி - புலோலி தெற்கு, பருத்தித்துறை]

**அமுதப்பிரியா** [அகிலகுமாரி பரமலிங்கம் - 4-ம் வட்டாரம், புங்குடுதீவு - யாழ்]

**குயின்சி** [தயாநிதி தர்மராசா - அராலி தெற்கு வட்டுக்கோட்டை-யாழ்]

**மன்சூர்** [கதிரிப்பிள்ளை செல்வகுமாரி - நாகர்கோவில் வடக்கு-யாழ்]

**வரதன்/வராகன்** [சின்னத்துரை சர்வகுமார்-கொற்றாவளை அளவெட்டி வடக்கு-யாழ்]

**சசி** [சுப்பிரமணியம் குமரன் - பொன்னம்பலம் வீதி, அல்வாய் கிழக்கு - பருத்தித்துறை யாழ்]

**சிவநாதன்** செல்லத்துரை ஜெயராஜ் -70 பொற்பதிவீதி, கொக்குவில கிழக்கு, யாழ்]

**அருச்சுனா** [சுப்பிரமணியம் சுரேஸ்குமார்-மீசாலை வடக்கு, கொடிகாமம்-யாழ்]

**அங்குதன்/அங்கதன்** (கந்தன் நடராசா - ராஜ்குமார்- 4-ம்கட்டை, இணுவில யாழ்)

**சுரேஸ்** [சுப்பிரமணியம் மணிவண்ணன் - 10/3.ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6998)

## சிந்தனைக்கு

எந்த ஒரு அரசியல் கட்சியும் இன்னோர் அரசியல் கட்சி போல்தான் இருக்கிறது - அதிலும் அதிகாரத்தில் உள்ள கட்சி.

— நோர்மன் இன்ஸ்பரி.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 13-07-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

# ஆளுக்கொரு யாப்பு

ஒரு ஜனநாயக நாட்டில் ஆட்சி மாற்றம் என்பது பொதுவாக ஒருகட்சியிடம் இருந்து இன்னொரு கட்சியிடம் ஆட்சி மாறுவதையே குறிக்கும். இதன் அடிப்படையில், ஆட்சியாளர்களுடன் சேர்ந்து, கொள்கை மாற்றங்களும் இடம்பெறும். அதிலும், வளர்ச்சியடைந்த நாடுகளின் ஆட்சிமாற்றங்கள் ஏற்படின் கொள்கை அளவிலும் பெருமாற்றங்கள் ஏற்படுவது குறைவு. சிறிய அளவினதான மாற்றங்களுடன் நாட்டின் வளர்ச்சிக்கு தீவிரமாக உழைத்தலே ஆட்சியாளர்களின் நோக்கமாக இருக்கும்.

ஆனால், மூன்றாம் உலக ஜனநாயகத்தின் நிலை பெரும் மாறுபாடானது. முன்னைய அரசாங்கத்தின் சகல திட்டங்களையும் இடைநிறுத்துவதும், புதிய கொள்கை என்ற ரீதியில் புதிய நடவடிக்கைகளைப் புகுத்துவதுமே அவர்களின் பிரதான நோக்கமாகும். இதில், ஒன்றை ஒன்று முற்றிலும் எதிர்மாறான கொள்கைகளைக் கடைப் பிடிப்பதும் உண்டு. ஒரு கட்சி மூடப்பட்ட பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்தால்,நேர்எதிர்மாறாக மற்றைய அரசாங்கம் திறந்த பொருளாதாரக் கொள்கையை கடைப்பிடிப்பதும் உண்டு. இதனால் நாடு பெரும் நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியுள்ளது.

ஆனால், இவைகூட இன்று ஓரளவு ஏற்புடையதுபோல் தெரிகின்றது. ஏனெனில், சிறிலங்கா அரசியலில் இன்று அரசாங்கத்தின் மாற்றத்துடன் அரசியல் பொருளாதாரக் கொள்கைகள் மட்டும் மாறவில்லை. அரசியல் அமைப்பையே மாற்றும் அவலநிலை இன்று உருவாகியுள்ளது. இம்மாற்றம் தனியாக கட்சிக்கும், கட்சி இடையிலான ஆட்சி மாற்றத்துடன் மட்டுமல்ல, ஒரு கட்சி ஆட்சியின் போது ஏற்படும் ஆட்சியாளர் மாற்றத்துடனும் மாற்றமடையத் தொடங்கியுள்ளது.

1970ஆம் ஆண்டு ஆட்சிக்குவந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் தமது மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி 1972இல் அரசியல் யாப்பை மாற்றிக் கொண்டன. இம்மாற்றத்தின் மூலம் சிறிலங்கா குடியரசானது. சிறிலங்காவின் பெயரும் சோசலிச ஜனநாயகக் குடியரசு என மாற்றம் பெற்றது. அத்

# நாபாவின் கொள்கைக்கு யூசுபின் விளக்கம்

[கொழும்பு]

ஈழம் என்பது ஜனநாயக சோஷலிச இலங்கையே என்று கூறியுள்ளார் ஈ.பி.ஆர் எல். எவ். அமைப்பிலிருந்து பிரிந்து புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஈ.பி.ஆர். எல். எப். நாபா பிரிவின் தலைவர் அபுயூசுப். இக்கருத்தையே முன்னாள் செயலாளர் நாயகம் பத்மநாபாவும் கொண்டிருந்தார் என அவர் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

ஈழம் என்பது சோஷலிச ஜனநாயக இலங்கை என்ற கருத்தினடிப்படையிலேயே எனது புதிய கட்சியின் கொள்கை வகுக்கப்படும். அதாவது ஜனநாயக சோஷலிச சமூகம் ஒன்றை தமிழ் - முஸ்லிம் மக்களினதும், தொழிலாளர் வர்க்க நலனிலும், உரிமையிலும் அக்கறை செலுத்துவதன் மூலம் உருவாக்க முயற்சிக்கப்படும் என்றும் அபுயூசுப் குறிப்பிட்டார்.

அத்துடன் 13ஆம் அரசியல் திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாண சபைக்கு கிடைத்த அதிகாரங்களை நடைமுறைப் படுத்தவும் தமது கட்சி சிறிய கட்சிகளின் உதவியை நாடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வடமத்திய மாகாணசபை கூட்டம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

வட மத்திய மாகாண சபை அங்குரார்ப்பணக் கூட்டம் எந்தவித அறிவித்தலுமில்லாமல் திடீரென்று ஒத்திவைக்கப்பட்டது.

போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்ட திருமதி கோமா ஹேரத் கடைசி ஆசனத்தில் இருக்கத் திருமதி எம். எச். நன்மெனிக்கா பதில் தலைவராக இருந்து அங்குரார்ப்பணக் கூட்டத்தை நடத்தியதை எதிர்க்கட்சியினர் ஆட்சேபித்தனர். இதனை அடுத்து வட மத்திய மாகாண ஆளுநர் ஈ. எல். சேனநாயக்கா அமர்வை ஒத்திவைத்ததுடன் கொள்கைப் பிரகடன உரை நிகழ்த்துவதையும் கைவிட்டார். "இதற்கு நான் பொறுப்பல்ல இது பற்றி எனக்குத் தெரியாது" என்றார் ஆளுநர்.

அமர்வு காலவரையறையின்றிப் பின்போடப்பட்டது.

## வடக்கில் நிலவுவது இனப்பிரச்சினையல்ல

### அஸ்கிரிய பீடாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

"இன்று வடக்கில் நிலவுவது இனப்பிரச்சினையல்ல பயங்கரவாதமேயாகும். நாட்டின் இறைமையைபாதுகாக்கவேண்டும். பெரிய நாடான இந்தியாவில் கூட 22 மாநில அரசுகளே உள்ளன. எனவே சிறிய நாடான இதை துண்டுதுண்டாக பிரிக்க வேண்டிய அவசியமில்லை" இவ்வாறு கூறியுள்ளார் அஸ்கிரியபௌத்த பீடாதிபதி பரிபான சந்தானந்த தேரோ.

தம்மை வந்து சந்தித்த மேல் மாகாண சபை முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கவை ஆசீர்வதித்து,நடந்த வைபவத்தில் பேசும்போதே அஸ்கிரியபீடாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார். நான் தனிப்பட்டமுறையில் மாகாணசபை ஆட்சி முறையை எதிர்க்கிறேன். தினேஷ்குணவர்த்தனாவும் எதிர்க்கிறார். எனினும் இப்போது கிடைத்துள்ள அதிகாரங்களை கொண்டு மக்களுக்கு சேவை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். சுதந்திரக் கட்சியில் நிலவும் உட்கட்சி பூசல்களால் கட்சியை சிலர் மட்டந்தட்டப்பார்க்கின்றனர் இந்நிலையிலும் நீங்கள் தந்தை, தாயாரை தொடர்ந்து ஆட்சிக்கு வந்திருப்பதை பாராட்டுகிறேன் என அஸ்கிரியதேரர் தெரிவித்தார்.

பண்டாரநாயக்கா குடும்பம் நாட்டிற்கு அளப்பரிய சேவை செய்துள்ளது. எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா வழியில் திருமதி சிறிமவோ பண்டாரநாயக்காவும் செய்துள்ளசேவையால் மக்கள்பெரிதும் நம்பிக்கை கொண்டுள்ளனர் என்றும் அஸ்கிரிய தேரர் மேலும் தெரிவித்தார்.

## அனுரா மீது நடவடிக்கை கட்சி தலைமைப்பீடம் முடிவு

[கொழும்பு]

சுதந்திரக் கட்சியின் தலைமைப்பீட நடவடிக்கைகள் தொடர்பாக கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்க பத்திரிகைளுக்கு அளித்த பேட்டி தொடர்பாக அவருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது என கட்சியின் தலைமைப்பீடம் தீர்மானித்துள்ளது.

களுத்துறை மாவட்ட எம்.பி. திலக் கருணாரத்ன கட்சியில் இருந்து விலக்கப்பட்டதைக் கண்டித்து சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் அண்மையில் பத்திரிகைகளுக்குப் பேட்டி அளித்திருந்தார். இந்தப் பேட்டிகள் கட்சியின் தலைமைப்பீடத்தை பகிரங்கமாகக் கண்டிப்பதுடன் கட்சியின்ஒழுங்கு நடவடிக்கைகளை மீறுவதாக அமைவதாக கட்சியின் தலைமைப்பீடம் தெரிவித்துள்ளது.

எம்.பிக்கள்கட்சி மாறுவதை தடை செய்யும் சட்டத்தை மாற்றி அமைப்பதற்குத் தனிநபர் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்துள்ளகளுத்துறை மாவட்ட எம்.பி. நெவில் பெர்னான்டோ மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது பற்றி கட்சி ஆராய்ந்து வருகிறது.

பூரண அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றியமைப்பதுடன் அரசியலமைப்பு சட்டத்தை மாற்றியமைத்தால் சுதந்திரக் கட்சி அதன் பூரண ஒத்துழைப்பை வழங்கும் என கடந்த செவ்வாயன்று நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் வைத்து கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

## 20. 4 வீதம் மட்டுமே காடு

நாட்டில் 1958 ஆண்டு நாற்பது விகிதம் பரந்திருந்த காடு இப்போது 20.4 விகிதமாகக் குறைந்துள்ளது.

இதனை நில, நீர்ப்பாசன மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி அத்துக்கோறல தெரிவித்தார்.

## யாழ். போதனா வைத்தியசாலைக்கான பிரிட்டிஷ் அன்பளிப்பு யாழ் வர அனுமதி

யாழ். போதனா மருத்துவமனைக்கென பிரிட்டிஷ் அரசு வழங்கிய மருத்துவஉபகரணங்கள் மிகவிரைவில் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்படவுள்ளன. கடந்த இரண்டு மாதத்திற்கு மேலாக கொழும்புத்துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 25 கொள்கலன்களில் உள்ள பொருள்கள் மீதான பரிசோதனை நிறைவடைந்ததைத் தொடர்ந்து இப்பொருள்களை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சி அதிகாரி ஒருவர்தெரிவித்தார்.

25 கொள்கலன்களில் கொழும்புத்துறைமுகத்தை வந்தடைந்த மருத்துவ உபகரணத் தொகுதியில் விடுதலைப் புலிகள் பயன்படுத்தக்கூடிய உபகரணங்கள் இருப்பதாக கூறப்பட்டதை அடுத்து மேற்படி பொருள்கள் தடுத்து வைக்கப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. இப்பரிசோதனையின் முடிவில் விடுதலைப் புலிகள் பயன்படுத்தக்கூடியஉபகரணங்கள்எதுவும் இல்லைஎன்று தெரியவந்துள்ளதாகவும்கூறப்பட்டுள்ளது.

## பாராளுமன்ற உறுப்பினருக்கு வாகனம் வழங்குவது சிறிலங்காவில் மட்டுமே

(கொழும்பு)

உலகில் சிறிலங்கா ஒன்றுதான் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்கள் கொடுத்துதவும் நாடு இந்தியா, இங்கிலாந்துஆகிய நாடுகளில் எம்.பிகளுக்கு இலவசப் பிரயாணச் சீட்டுகள் மாத்திரமே வழங்கப்படுகின்றன. இவ்வாறு ராவய ஆசிரியர் விக்டர்ஐவன் கருத்தரங்கொன்றில் பேசும்போது தெரிவித்தார்.

பட்டபொல சோஷலிஸ்ட் கல்வி வட்டத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கில் பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஐவன் தொடர்ந்து பேசுகையில், இன்று பயங்கரமான நிலையில் நாடு உள்ளது. நாம் கண்ணால் பார்ப்பது எல்லாம் உண்மை அன்று. திறந்த பொருளாதாரப் பிரச்சினை, வடக்கில் நிலவும் நெருக்கடி ஆகியன மிக ஆழமாக வேரூன்றிவிட்டன. இவற்றிற்கு உடனடித் தீர்வு அவசியமானது. இது ஆளும் கட்சியின் பணிமாத்திரமல்ல எதிர்க்கட்சிகளும் அதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும். நாட்டுக்குஆற்றவேண்டிய பணியில் அக்கறையில்லாமல் இருந்ததற்கான பொறுப்பை எதிர்க்கட்சியினரும் ஏற்கவேண்டும் என்றார்.

## ராவின் உதவியாளர் விசாரிக்கப்படுவார்

[டில்லி]

இந்திய பங்குச் சந்தை மோசடி குறித்து விசாரணை செய்துவரும்இந்தியப் பாராளுமன்றக் குழு பிரதமர் நரசிம்மராவுக்கு பங்குச்சந்தை மோசடியாளர் என்று குற்றஞ்சாட் ... விசாரிக்கவுள்ளது.

இந்தியப் பிரதமரின் புதுடில் லிவாசஸ்தலத்தில் வைத்து மேத்தாவிடம் பணமடங்கிய சூட்கேசை பிரதமரின் உதவியாளரான ஆர். கே. கான்

## திராவிடமொழி மாநாடு ஆந்திராவில் ஆரம்பமாகிறது

[சென்னை]

நாடு பெரும் நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியுள்ளது.

ஆனால், இவைகூட இன்று ஓரளவு ஏற்புடையதுபோல் தெரிகின்றது. ஏனெனில், சிறிலங்கா அரசியலில் இன்று அரசாங்கத்தின் மாற்றத்துடன் அரசியல் பொருளாதாரக் கொள்கைகள் மட்டும் மாறவில்லை. அரசியல் அமைப்பையே மாற்றும் அவலநிலை இன்று உருவாகியுள்ளது. இம்மாற்றம் தனியாக கட்சிக்கும், கட்சி இடையிலான ஆட்சி மாற்றத்துடன் மட்டுமல்ல, ஒரு கட்சி ஆட்சியின் போது ஏற்படும் ஆட்சியாளர் மாற்றத்துடனும் மாற்றமடையத் தொடங்கியுள்ளது.

1970ஆம் ஆண்டு ஆட்சிக்குவந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் தமது மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி 1972இல் அரசியல் யாப்பை மாற்றிக் கொண்டன. இம்மாற்றத்தின் மூலம் சிறிலங்கா குடியரசானது. சிறிலங்காவின் பெயரும் சோசலிச ஜனநாயகக் குடியரசு என மாற்றம் பெற்றது. அத்தோடு பொருளாதாரக் கொள்கையோடு, கல்விக் கொள்கையும் மாற்றம் அடைந்தது. இதன் மூலம் ஒரு சோசலிசப் புரட்சியை செய்து முடித்ததாக சுதந்திரக்கட்சி கருதியது.

ஆனால், இவ்அரசியலமைப்பு ஆறு வருடங்களுக்கு மேல் நிலைக்கவில்லை. அதாவது, சுதந்திரக்கட்சியும், அதன் தோழமைக் கட்சிகளும் ஆட்சியிலிருந்து ஒருவருடத்திற்குள் அதாவது 1978-ல் புதிய அரசியலமைப்பு ஒன்று சிறிலங்காவில் அறிமுகப்படுத்தப்பட்டது. பாராளுமன்றத்தில் ஐ.தே. கட்சி பெற்ற ஆறில் ஐந்து பெரும்பான்மையைக் கொண்டு ஜே. ஆர். ஜெயவர்த்தனா இவ் அரசியல் அமைப்பை உருவாக்கினார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினை இவ் அரசியலமைப்பு, பாராளுமன்றத்திடம் இருந்த அதிகாரங்களில் பெரும்பாலானவற்றை ஜனாதிபதிக்கு வழங்கியது.

அத்தோடு, சிறிலங்காவின் பெயரும், சோசலிச ஜனநாயகக் குடியரசு என்பது மாறி ஜனநாயக சோசலிசக் குடியரசு என மாற்றப்பட்டது. அதாவது, பெயர் மாற்றத்தின் மூலம் சுதந்திரக்கட்சி சோசலிசத்தை நிறுவிக்கொண்டது போல், ஐக்கிய தேசியக்கட்சி ஜனநாயகத்தை நிறுவிக் கொண்டது. மேலும், ஜே. ஆரின் அரசியலமைப்பு மாற்றத்தோடு, தேர்தல் முறையும் மாற்றம் கண்டது. அத்தோடு, பொருளாதாரக்கொள்கை உட்பட கல்விக் கொள்கையும் தலைகீழாக, எதிர்மறையாக மாறியது.

ஆனால், மீண்டும் பதினைந்து வருட காலத்தின் பின் ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். ஆனால், இதில் முக்கியமானது ஆட்சிமாற்றம் கட்சிகளுக்கு இடையில் ஏற்படாமல், ஒரே கட்சிக்குள் இடம் பெற்றுள்ள வேளையில் அரசியல் அமைப்புமாற்றம் இடம் பெற இருப்பதாகும். அதாவது, முன்னர் கட்சிக்கொரு அரசியலமைப்பு, கொள்கை என்ற நிலையில் இருந்து இன்று ஆளுக்கொரு அமைப்பு, ஆளுக்கொரு கொள்கை என்ற ரீதியில் சிறிலங்கா அரசின் ஆட்சி இடம்பெறும் நிலை உருவாகியுள்ளது.

இந்நிலை தொடருமானால், எதிர்காலத்தில் ஒவ்வொரு அமைச்சருக்கும் ஓர் யாப்பு. பாராளுமன்ற உறுப்பினருக்கும் ஓர் யாப்பு என்ற நிலை உருவாகலாம். அத்தோடு, அன்றைய அரசியல்யாப்பை அறிந்துகொள்ள நாளாந்த செய்திப் பத்திரிகை பார்க்க வேண்டிய அவசியம் மக்களுக்கு ஏற்பட்டு விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

---

தம்மை வந்து சந்தித்த மேல் மாகாண சபை முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கவை ஆசீர்வதித்து, நடந்த வைபவத்தில் பேசும் போதே அஸ்கிரியபீடாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார். நான் தனிப்பட்டமுறையில் மாகாணசபை ஆட்சி முறையை எதிர்க்கிறேன். தினேஷ் குணவர்த்தனா

நாட்டிற்கு அளப்பரிய சேவை செய்துள்ளது. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா வழியில் திருமதி சிறிமவோ பண்டாரநாயக்காவும் செய்துள்ளசேவையால் மக்கள் பெரிதும் நம்பிக்கை கொண்டுள்ளனர் என்றும் அஸ்கிரிய தேரர் மேலும் தெரிவித்தார்.

மாகக் கண்டிப்பதுடன் கட்சியின்ஒழுங்கு நடவடிக்கைகளை மீறுவதாக அமைவதாக கட்சியின்தலைமைப்பீடம் தெரிவித்துள்ளது.

எம். பிக்கள்கட்சி மாறுவதை தடை செய்யும் சட்டத்தை மாற்றி அமைப்பதற்குத் தனிநபர் பிரேரணை ஒன்றைக்

காடு

நாட்டில் 1958 ஆண்டு நாற்பது விகிதம் பரந்திருந்த காடு இப்போது 20.4 விகிதமாகக் குறைந்துள்ளது.

இதனை நில, நீர்ப்பாசன மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி அத்துக்கோறல தெரிவித்தார்.

பணிமாத்திரமல்ல எதிர்க்கட்சிகளும் அதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும். நாட்டுக்குஆற்றவேண்டிய பணியில் அக்கறையில்லாமல் இருந்ததற்கான பொறுப்பை எதிர்க்கட்சியினரும் ஏற்கவேண்டும் என்றார்.

---

## ராவின் உதவியாளர் விசாரிக்கப்படுவார்

[டில்லி]

இந்திய பங்குச் சந்தை மோசடி குறித்து விசாரணை செய்துவரும்இந்தியப் பாராளுமன்றக் குழு பிரதமர் நரசிம்மராவுக்கு பங்குச்சந்தை மோசடியாளர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட ஹர்சத் மேத்தா பணமடங்கிய சூட்கேசை வழங்கினாரெனக் கூறப்படும் புகார் தொடர்பாக பிரதமரின் உதவியாளர் ஒருவரை விசாரிக்கவுள்ளது.

இந்தியப் பிரதமரின் புதுடில்லிவாசஸ்தலத்தில் வைத்து மேத்தாவிடம் பணமடங்கிய சூட்கேசை பிரதமரின் உதவியாளரான ஆர். கே. காண்டேகர் வாங்கியதாகக் கூறப்படுகிறது. மேத்தாவின் இக்கூற்றை காண்டேகர் இது வரை மறுக்கவோ, ஏற்கவோ இல்லை.

## வீரப்பனுக்கு உதவிவழங்கும் கோஷ்டி கைதாம்

[சென்னை]

வீரப்பனுக்கு வெடிமருந்துகளும், அத்தியாவசியப் பொருள்களும் வழங்கியதாக சந்தேகிக்கப்படும் ஒன்பதுபேர் தமிழக அதிரடிப் படையால் பெரியார் மாவட்டக் காட்டுப் பகுதியில் கைது செய்யப்பட்டதாகத் தமிழகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதிரடிப் படையினர் காட்டில் தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டபோது இந்தக் குழுவைக் கண்டுபிடித்ததாகவும், அவர்கள் பொலிஸாரை நோக்கிச் சுட பொலிஸ் திருப்பிச் சுட்டதாகவும் பின்னர் 9 பேரும் சரணடைந்ததாகவும் அதிரடிப் படைப் பொலிஸார் கூறினர்.

கைதானவர்களில் வீரப்பனின் நெருங்கிய உறவினர்களும், சகாக்களும் இருந்தனர் என்றும், இவர்களிடம் 25 கிலோ வெடிமருந்தும்நாட்டுத் துப்பாக்கிகளும், பங்கீட்டுப் பொருள்களும் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

## திராவிடமொழி மாநாடு ஆந்திராவில் ஆரம்பமாகிறது

[சென்னை]

திராவிட மொழியியலாளரின் 21ஆவது மாநாடு நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆந்திராவில் ஆரம்பமாகிறது. திருவனந்தபுரம் பன்னாட்டுத் திராவிட மொழியியல் நிறுவனமும், அகில இந்திய திராவிட இயல் நிறுவனமும் இணைந்து நடத்தும் இந்த மூன்றுநாள் மாநாடு சித்தூர் மாவட்டம் குப்பத்தில் நடைபெறவிருக்கிறது.

மாநாட்டில் மொழியியல், பண்பாடு முதலிய துறைகளின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படும். ஒலியியல், ஒலிக்கண இயல், சொல்லியல், பேச்சுக் குறையுடைய குழந்தைகள் பற்றிய ஆய்வு, சமூக மொழியியல், உளவியல் ஆகியவை பற்றியும் ஆராயப்படும் சுமார் 200 ஆய்வாளர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

இம்மாநாட்டில் ஐந்து பரிசுகள் வழங்கப்பட உள்ளன. திராவிட மலையின மக்களை பற்றிய நூல் ஒன்றிற்கு மூவாயிரம் ரூபாவும், தொல்காப்பிய மொழி பெயர்ப்பு ஒன்றிற்கு மூவாயிரம் ரூபாவும், இளைய ஆய்வாளர் சமர்ப்பிக்கும் நல்ல ஆய்வுக் கட்டுரைக்கு ஆயிரம் ரூபாவும், மொழியும் கணிப்பொறியும் என்ற தலைப்பில் வெளியாகும் நூல் அல்லது கட்டுரைக்கு ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

## ஈராக் மீது நடவடிக்கை தொடரலாம் - அமெரிக்கா

(வாஷிங்டன்)

ஐ. நா. ஆயுத மேற்பார்வை நிபுணர்களின் பணிகளை ஈராக் தொடர்ந்து தடுத்தால் மேற் கொண்டு இராணுவ நடவடிக்கைகளை அது எதிர் கொள்ள வேண்டி ஏற்படும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

பக்தாத்தில் தமது பணிகளை முடிக்காமலேயே ஐ நா. ஆயுத மேற்பார்வை நிபுணர்கள் திரும்பி விட்டதையடுத்து அமெரிக்கா இந்த எச்சரிப்பை வெளியிட்டுள்ளது. இரு ஏவுகணை ஆராய்ச்சி நிலையங்களை நிபுணர்கள்மூடிவிடுவதை ஈராக் தடுத்து விட்டதாக அவர்கள் புகாரிட்டிருந்தனர். இது குறித்து நேற்று ஐ.நா. பாதுகாப்புச்சபைகூடி ஆராய்ந்தது.

வளைகுடாப்பகுதியில்இன்னமும் அமெரிக்க யுத்தக் கப்பல்கள் தரித்து நிற்பது குறிப்பிடத்தக்கது.

## ஜூன் மாதத்திற்கான இலவச உணவு விநியோகப் பட்டியல்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தவர்களுக்கான கடந்த யூன் மாத நான்கு வாரங்களுக்குமான நிவாரண விநியோகத்திற்கென யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியினரினால் தயாரிக்கப்பட்ட உலர் உணவு விநியோகப் பட்டியல் வருமாறு:

| பொருள்கள் | வி.வி விலை | 1அங் எடை | 1அங் ரூ. ச. | 2அங் எடை | 2அங் ரூ. ச. | 3அங் எடை | 3அங் ரூ. ச. | 4அங் எடை | 4அங் ரூ. ச. | 5அங் எடை | 5அங் ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. அரிசி (கோறா) | 17.00 | 2 கிலோ | 34.00 | 2½கிலோ | 42.50 | 3½கிலோ | 59.50 | 4½கிலோ | 76.50 | 6கிலோ | 102.00 |
| 2. மா | 14.00 | 2'' உம் 100 கிராமும் | 29.40 | 2'' உம் 300 கிராமும் | 32.20 | 4'' உம் 550கிராமும் | 63.70 | 4'' உம் 900கிராமும் | 68.60 | 7 '' | 98.00 |
| 3. சீனி | 28.00 | ½கிலோ | 14.00 | ½கிலோ | 14.00 | 750கிராம் | 21.00 | 1கிலோ | 28.00 | 1¼கிலோ | 35.00 |
| 4. பருப்பு (K) | 44.00 | 100 கிராம் | 4.40 | ¼கிலோ | 11.00 | ¼கிலோ | 11.00 | ½கிலோ | 22.00 | ½கிலோ | 22.00 |
| 5. தேயிலை | 75.00 | 25 கிராம் | 1 88 | 50கிராம் | 3.75 | 50கிராம் | 3.75 | 75கிராம் | 5.63 | 100கிராம் | 7.50 |
| 6. கைலண்ட் பால்மா | 45.00 | — | — | 1பக்கற் | 45.00 | 1பக்கற் | 45.00 | 1பக்கற் | 45.00 | 1பக்கற் | 45.00 |
| 7. வொண்ட லைட் சோப் | 5.50 | — | — | 1கட்டி | 5.50 | 1கட்டி | 5.50 | 1கட்டி | 5.50 | 1கட்டி | 5.50 |
| ★ மிகுதி: | | | 0.32 | | 0.05 | | 0.55 | | 0.77 | | — |
| அனுமதிக்கப்பட்ட பொருள்களின் பெறுமதி. | | | 84.00 | | 154.00 | | 210.00 | | 252 00 | | 315.00 |

# இனவாத பத்திரிகை குறித்து தமிழ் தினசரி கண்டனம்

(கொழும்பு)

நீண்ட காலமாக நாம் பேசி வந்த தேசிய வாதம் குறுகிய இனவாதம் ஆகிவிட்டது இன வாதப் பத்திரிகைகள் அனைத்தும் இன்று எரியும் நெருப்பில் எண்ணெய் விடுகின்றன. இவ்வாறு கொழும்பு தமிழ் தினசரி ஒன்று கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அது மேலும் குறிப்பிடுகையில்: அபிவிருத்தியை மழுங்கடித்து பெருந் தொகைப் பணத்தை பாதுகாப்பு என்ற பெயரில் யுத்தத்திற்கு செலவு செய்கின்றோம். வெறும் வரலாற்று குருட்டுத்தனத்திற்கும் மலட்டுத் தனத்திற்கும் இடமளித்து பலஇனங்கள் வாழும் நாட்டுக்கு ஏற்ற அரசியல் முறைமையை உருவாக்காமல் நாட்டை குலைப்பது பேரினவாத அரசியலே என்பதை உலகம் உணர்கிறது.

தெரிவுக்குழுவின் ததிகிணத்தோம் நாடகங்களும் அரசியற் கட்சிகளின் சறுக்கல்களும் நடந்து முடிந்துள்ளன சர்ச்சைக்குரிய கிழக்கு சர்வஜன வாக்கெடுப்பு அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன் நடைபெறும் சாத்தியம் இல்லை. தெரிவுக்குழுவின் தீர்மானம் என தொடரவிருந்த இந்த சூயுக்தி கைவிடப்பட்டு விட்டது.

மொத்தத்தில் தெரிவுக்குழு மேற்கொண்ட அரசியற் பயிற்சிகள் தீர்வுகாண முடியாத நிலைக்கே போயுள்ளது. இனப்பிரச்சினை தீர்வு காண்பவர்கள் சூத்திரம் இழுக்கும் மாடுகள் போல் வெறுமனே சுற்றி சுற்றி வருவது தான் மிச்சம்.

பிரச்சினையை தீர்க்க புறப்பட்ட தெரிவுக்குழு பிரச்சினையிலேயே மூழ்கி நேர்மையற்ற அரசியற் சக்திகளின் மத்தியில் மாண்டுபோய் விட்டது என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சீமெந்து கூட்டுத்தாபன ஊழியருக்கு ஆபத்துப்படி

(கொழும்பு)

காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன ஊழியருக்கு ஆபத்துகால படியை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கும்படி பதில் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சந்திரா ரணதுங்கா சம்பந்தப்பட்ட அதிகாரிகளைபணித்துள்ளார்.

கடந்த ஒன்றரை வருடகாலமாக இவ் ஆபத்துப்படி வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி தொழிற்சாலையின் எதிர்காலம் தொடர்பாக வெளிநாடு சென்றுள்ள வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன கூரே நாடு திரும்பிய பின்னரே தீர்மானிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் வங்கியின்

## நவீன சந்தைக் கிளை பல்கலைக்கு இடமாற்றம்

மக்கள் வங்கி யாழ். ஸ்ரான்லி வீதி கிளை கட்டடத்தில் இயங்கிவரும் யாழ். நவீன சந்தை கிளை விரைவில் யாழ். பல்கலைக்கழக வளாகத்திற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக வங்கி வட்டாரம் தகவல் வெளியிட்டுள்ளது

இவ்வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் யாழ். நகரிலுள்ள கிளைகளில் அதாவது யாழ். ஸ்ரான்லி வீதி, கன்னாதிட்டி, பிரதான வீதி கிளைகளில் தமது கணக்குகளை வைத்திருக்க விரும்பின் அதற்குரிய வசதிகள் செய்துகொடுக்கப்படும். இது சம்பந்தமாக யாழ். நவீன சந்தை கிளை முகாமையாளருடன் நேரில் தொடர்புகொள்ளுமிடத்து உரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

யாழ் நவீன சந்தை கிளையின் யாழ். பல்கலைக் கழக வளாக சேவை நாளை புதன் கிழமை காலை 9-00 மணிக்கு பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும்.

## கிளாலிக் கடற்பரப்பிலிருந்து பீரங்கி தாக்குதல்

(தென்மராட்சி)

கிளாலிக் கடற்பரப்பில் நேற்று துப்பாக்கிவேட்டு, பீரங்கி சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன. மாலை 6.30 மணியளவில் கிளாலி கடற்பரப்பிலிருந்து கடற்படையினர் ஐம்பது கலிபர் தாக்குதலையும் பீரங்கித் தாக்குதலையும் கரையை நோக்கி நடத்தினர். அதே வேளை பராவெளிச்சம் பாய்ச்சப்பட்டதாகவும் அறியவருகிறது.

இதன்போது ஏற்பட்ட சேத விபரம் தெரியவரவில்லை. (86)

இந்தியாவின்

கையின் ஒருமைப்பாட்டை நிலைநிறுத்தி சிறந்த சித்தாந்தத்துடன் வழிநடத்திச்செல்ல காமினி திசநாயக்காவினால் மட்டுமே முடியும்'' என்றார்.

இக் கூட்டத்தில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் செயலர் ஜி எம். பிரேமச்சந்திர பேசுகையில், ''ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி கட்சி ரீதியில் தேசிய அரசாங்கத்துடன் இணைவதற்கு முக்கிய காரணம், வடக்கு - கிழக்கில் முடிவடையாது வருடக்கணக்காகத் தொடர்ந்து செல்லும் யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்கேயாகும்.

இன்று இந்த நாடு அடிமை நாடுபோல் காணப்படுகிறது. புலிகளின் தாளத்திற்கு ஆட்டம் போடுகிறது மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா புலிகளுக்கே திருட்டுத் தனமாக ஆயுதம் வழங்கினார். கடந்த வாரம் 25 கொள்கலன்களில் பகிரங்கமாகவே கப்பலில் பொருள்கள் அனுப்பப்பட்டன இந்தஅரசாங்கம் ஒருவழியும் தெரியாது தவிக்கிறது.

புலிகளின் கூத்துக்களை நிறுத்துவதற்கு அரசாங்கத்தால் முடியாது போனால் புலிகளின் கொட்டத்தை ஒடுக்க ஜனநாயக ஐ. தே. முன்னணி அரசாங்கத்துக்கு தனது ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கிறது.

இன்று நாடு இருக்கும் நிலை தொடர்ந்தால்வடக்கு-கிழக்கு பிரபாகரனுக்கும், மலையகத்தைத் தொண்டமானுக்கும் வழங்கி விட்டு கைகட்டி நிற்க வேண்டிய நிலைதான் ஏற்படும்'' என்றார்.

## போட்டிகள்

புங்குடுதீவு கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையேயான ஆங்கில தினப் போட்டிகள் நேற்று யூனிவேர்சல் கல்வி நிலையத்தில் கொத்தணி அதிபர் திரு. க. பேரம்பலம் தலைமையில் நடைபெற்றன.

மாவீரரான

கொலின்ஸின் தந்தையாரும், சகோதரியும்ஏற்றிவைத்தனர். தொடர்ந்து மடு வட்டத்தை சேர்ந்த நிகாஸ் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பொதுமக்கள் சார்பில் ஆசிரியர் துரைசிங்கம். ஆசிரியர் பதமநாதன், மன்னார் மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பாமகன், மடு வட்ட பொறுப்பாளர் அல்வின் மற்றும் மன்னார் மாவட்ட அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் நந்தகுமார் (டென்சில்) ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

தொடர்ந்து விளையாட்டு வீரர்களுக்கான பரிசில்கள் வழங்கபபட்டதை அடுத்து கரும்புலிகள் நினைவாக தயாரிக்கப்பட்ட ஒளிப்பதிவு நாடா மக்களுக்குக் காண்பிக்கப்பட்டதுடன் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

காரைநகர்

தாக்குதலின்போது சுமார் ஒரு மணித்தியாலம் வரை தொடர்ச்சியாக வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதனால் மீனவர்கள் தொழில்களை கைவிட்டு கரை சேர்ந்தனர் என மீனவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (41)

கட்சித்

கிடைக்கவில்லை என்றும் அப்படி அழைக்கப்பட்டால் அதுபற்றி தாம் யோசனை செய்யப்போவதாகவும் திருமதி அத்துலத் முதலி கூறினார்.

குமாரியில்

நலசேவைநிலையஊழியர்களுக்கென 25 துவிச்சக்கரவண்டிகளும் வந்துள்ளன. கூட்டுப் படைத் தலைமை அலுவலகத்தினால் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த மேற்படி பொருள்கள் நேற்று எடுத்துவரப்பட்டுள்ளன.

மேலும் ஒருதொகுதி விவசாய உபகரணங்கள் அடுத்து வரும் கப்பல்களில் எடுத்து வரப்படுமென இத்திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி

ஜனாதிபதி

வழங்கும்படியும் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் குடாநாட்டுக்கான தபால் விநியோகத்தை சீராக்கும்படியும் கப்பல்களது எண்ணிக்கையை குறைக்கவேண்டாம் என்றும் அரச அதிபர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனினும் மேற்படி கோரிக்கைகளை செவிமடுத்த ஜனாதிபதி இக் கோரிக்கைகளை அமுல்படுத்துவது குறித்து திருப்திகரமான பதில்கள் எதையும் கூறவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

## மறியல்

சென்னைத் தொலைக்காட்சி நிலையம் ஒரு தலைப்பட்சமான செய்திகளை ஒளி பரப்புவதாக குற்றம்சாட்டி, சிந்தனையாளர் பேரவை என்னும் அமைப்பைச் சேர்ந்தவர்கள் சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தின் முன் நேற்று மறியல் செய்தார்கள்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### கப்டன் டக்ளஸ்

(செல்வன் சதீஸ்கரன்)

[மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை உயர்தர மாணவன்]

தாயின் மடியில்: 12. 01. 1978

தாயக மண்ணில்: 18. 07. 1991

தாகம் பொங்கி தமிழீழம் கேட்டு
மகனே சதீஸ் ஆவி அடங்கி அனலில் எரிந்தாய்
என் நெஞ்சுக்குள் வெடிக்குதடா சதீஸ்
வேங்கையாய் விடிவுதேடி வீழ்ந்த மாவீரனே டக்ளஸ்
தமிழ் இனத்திற்காக தீயில் எரிந்த புலி வீரனே
இளமைக்கால இனிமைகள் யாவும் துறந்த வேங்கையே சதீஸ்
அம்மா என்று எப்போ அழைப்பாயடா என் தெய்வமே
ஈராண்டு அல்ல நூறுஆண்டானாலும் உன்னைமறவோம் ஐயா

மெமோறியல் அதிபர், ஆசிரிய, ஆசிரியைகளையும் நண்பர்களையும், போராளிகளையும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 12-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10359

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-5491, 24-5509, 41-8629, 26-4726, 26-7672, 24-9773, 28-0425, 22-3641, 26-0502, 22-8754, 26-5493, 26-4429, 28-4707, 26-5206, 24-1983, 40-7704, 24-4636, 24-5036, 26 5725, 26-0632 26-0560, 24-5416, 24-9549, 24-9830, 24-6065

## 14ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம்: 10 —



மறைவு: 30 —

## தேவை

மாதாந்த தமிழ் சஞ்சிகை ஒன்றிற்கு தகுதியான ஆசிரியர் தேவை.

தகைமைகள்:

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10359

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

26-5491, 24-5509, 41-8629, 26-4726, 26-7672, 24-9773, 28-0425, 22-3641, 26-0502, 22-8754, 26-5493, 26-4429, 28-4707, 26-5206, 24-1983, 40-7704, 24-4636, 24-5036, 26 5725, 26-0632 26-0560, 24-5416, 24-9549, 24-9830, 24-6065


## தேவை

மாதாந்த தமிழ் சஞ்சிகை ஒன்றிற்கு தகுதியான ஆசிரியர் தேவை.

**தகைமைகள்:**

1. ஆங்கில மொழியறிவு
2. தமிழ் மொழியறிவு
3. ஆங்கிலத்திலிருந்து தமிழ் மொழிபெயர்ப்பு அனுபவம்
4. பத்திரிகைத்துறையில் அனுபவம்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

**இரசன் அச்சகம்,**
144, அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/6999)


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

**13-07-93**

ஜனனம் 03-02-1972
வீரச்சாவு 18-07-1991

ஆனையிறவு முகாம் தகர்ப்பில் வீரச்சாவடைந்த

**வீரவேங்கை நிசா**

(செல்வி விஜயகுமாரி சின்னத்தம்பி)

சிங்கை நகர், புலோலி

''விடுதலைக்கு வித்திட்ட நிசாவே!
ஆனையிறவில் அரக்கர்களை அழித்துவிட்டு
வீரச்சாவடைந்தனையோ!

உன் ஆத்மா சாந்தி அடைவதாக!!

நின் பிரிவால் வாடும்

ஐயா, அம்மா, சகோதர
சகோதரிகள், உற்றார்,
உறவினர்கள்.

சிங்கை நகர்,
வல்லிபுரக் குறிச்சி,
புலோலி

(5356)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


உரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

யாழ் நவீன சந்தை கிளையின் யாழ். பல்கலைக் கழக வளாக சேவை நாளை புதன் கிழமை காலை 9-00 மணிக்கு பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும்.

ஜனநாயக ஐ. தே. முன்னணி அரசாங்கத்துக்கு தனது ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கிறது.

இன்று நாடு இருக்கும் நிலை தொடர்ந்தால் வடக்கு-கிழக்கு பிரபாகரனுக்கும், மலையகத்தைத் தொண்டமானுக்கும் வழங்கி விட்டு கைகட்டி நிற்க வேண்டிய நிலைதான் ஏற்படும்'' என்றார்.

கட்சித் கிடைக்கவில்லை என்றும் அப்படி அழைக்கப்பட்டால் அதுபற்றி தாம் யோசனை செய்யப்போவதாகவும் திருமதி அத்துலத் முதலி கூறினார்.

குமாரியில்

நலசேவைநிலையஊழியர்களுக்கென 25 துவிச்சக்கரவண்டிகளும் வந்துள்ளன. கூட்டுப் படைத் தலைமை அலுவலகத்தினால் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த மேற்படி பொருள்கள் நேற்று எடுத்துவரப்பட்டுள்ளன.

மேலும் ஒருதொகுதி விவசாய உபகரணங்கள் அடுத்து வரும் கப்பல்களில் எடுத்து வரப்படுமென இத்திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் வடமராட்சி செய்தியாளருக்கு துறைமுகத்தில் வைத்து தெரிவித்தார். (யோ)

எனது

ரிகாவினால் தமக்குப் பெரும் தொல்லை என்றும் எனக்கு ஏதாவது செய்யவேண்டுமென்றும் கூட ஓர் அமைச்சர் கூறியிருப்பதாக அறிகின்றேன்''

இருந்தாலும் இத் தகவல் தொடர்பாக நான் அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் எனது உயிலை எழுதுவதில் மாத்திரம் துரிதமாகச் செயல்பட்டேன். உண்மையில் விடுதலைப் புலிகள் என்னைக் கொலை செய்ய வேண்டுமானால் அதனை எப்படியும் செய்துமுடிப்பார்கள். பலத்த பாதுகாப்புடன் இருந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவை கொலை செய்ய முடியுமாயின் நான் எம் மாத்திரம்? என்றார்

## 14ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம்: 10 — 01 — 1974



மறைவு: 30 — 06 — 1993

பாலசுப்பிரமணிய சர்மா

**ஹரிஹரன்**

குழந்தைத் தனமான உன்சிரிப்பும்
குதூகலமான உன் பேச்சும்
நிலையாக நிற்குதடா எம் நெஞ்சில்
மறத்தமிழன் என்றிருந்தாய் - இன்று
மாவீரன் ஆகிவிட்டாய்
மனதினிலே உன் நினைவு
மலையாக நிற்குதடா.

[இ] —அன்பு நண்பர்கள்


# சோழன் நெல் அரிசி வாணிபம்

15-07-1993 வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு

பலாலி வீதி, திருநெல்வேலியில் புதிதாகத் திறக்கப்படவிருக்கும்

சோழன் நெல் அரிசி வாணிப நிலையத்தில்

யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட தரமான

நாட்டரிசி, தவிடு, நெல் மற்றும் உள்ளூர் விளை பொருள்களை

நியாய விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை சகல வியாபாரிகளுக்கும் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

**பொறுப்பாளர்,**

சோழன் நெல் அரிசி வாணிபம்

(5365)


(செல்வன் சதீஸ்கரன்)

[மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை உயர்தர மாணவன்]

தாயின் மடியில்: 12. 01. 1978

தாயக மண்ணில்: 18. 07. 1991

தாகம் பொங்கி தமிழீழம் கேட்டு
மகனே சதீஸ் ஆவி அடங்கி அனலில் எரிந்தாய்
என் நெஞ்சுக்குள் வெடிக்குதடா சதீஸ்
வேங்கையாய் விடிவுதேடி வீழ்ந்த மாவீரனே டக்ளஸ்
தமிழ் இனத்திற்காக தீயில் எரிந்த புலி வீரனே
இளமைக்கால இனிமைகள் யாவும் துறந்த வேங்கையே சதீஸ்
அம்மா என்று எப்போ அழைப்பாயடா என் தெய்வமே
ஈராண்டு அல்ல நூறு ஆண்டானாலும் உன்னை மறவோம் ஐயா

மெமோறியல் அதிபர், ஆசிரிய, ஆசிரியைகளையும் நண்பர்களையும், போராளிகளையும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தாய்: யோகராசா கிருஷ்ணராணி,
அக்காமார்: பிறேமலதா, யசோதலதா,
அண்ணா: சுதாஸ்கரன், அண்ணி: தயாளினி,
தங்கை: கேமலதா, தம்பிமார்: ராஜ்கரன்,
ரமேஷ்கரன், பிரபாகரன்.

நல்லதம்பி ஹோட்டல்,
ஆஸ்பத்திரி வீதி,
மானிப்பாய்.

(5360)

## ஈராண்டு நினைவலைகள்

தாயின் மடியில்: 08. 12. 1975



தாயக மண்ணில்: 18. 07. 1991

**2-ம் லெப். தனேந்திரன் [அக்பர்]**

(துரைசிங்கம் ஸ்ரீகரன் - இளவாலை)

முத்தான ஈழம் படைத்திடவே - நீயும்
வித்தாக விழுந்திட்டாய்
ஆனையிறவுச் சமரினிலே - பகைத்
தானை பல ஒழித்தாய் - எங்கள்
சொத்தான தனேந்திரனே
பித்தாகி உன் வழியில் பின் தொடர்வோம்
ஆயிரமாய்.

ஆனையிறவு முகாம் தகர்ப்பு முயற்சியில் உந்தனுடன் வீரச்சாவெய்திய ஏனைய மாவீரர்களின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

''மலர்மகால்''
மடத்தடி ஒழுங்கை,
மானிப்பாய்.

உந்தன் பிரிவால் துயருறும்
அம்மா, சகோதரர்,
உறவினர்கள், நண்பர்கள்.

(5343)